### மக்களின் உணர்ச்சிகளைச் சீண்டி அரசியல் ஆதாயம் அடையப் பார்க்கிறார் பிரதமர்! அமைதியைப் பிளக்கும் சட்டம் கொண்டு வந்த

# பா.ஜ.க.வையும் - ஆதரவாக வாக்களித்த அ.தி.மு.க.வையும் மக்கள் மன்னிக்க மாட்டார்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!



**சென்னை, மார்ச் 12-**

**கழகத் தலைவரும் - தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில், "இப்போது, தேர்தலில் தனது அனைத்து அஸ்திரங்களும் எடுபடாமல் போன நிலையில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவதன் மூலமாகக் கரையேற முயற்சிக்கிறார் பிரதமர் மோடி. தேர்தல் நேரத்தில் மக்களின் உணர்ச்சிகளைச் சீண்டி அரசியல் ஆதாயம் அடையப் பார்க்கிறார் பிரதமர்.**

**அமைதிமிகு இந்தியாவில் பிளவுமிகு சட்டத்தைக் கொண்டுவந்த பா.ஜ.க.வையும், அந்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த அடிமை அ.தி.மு.க.வையும் மக்கள் மன்னிக்க மாட்டார்கள்! தக்க பாடம் புகட்டுவார்கள்!" என்று கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :

'குடியுரிமை' என்ற மனிதநேயக் கொள்கையை மதம் இனத்தால் வேறுபடுத்தும் பிளவுவாதக் கொள்கையாக மாற்றியது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இசுலாமிய மதத்தவரையும், இலங்கைத் தமிழரையும் வஞ்சிக்கும் குடியுரிமை திருத்தச் சட்டமசோதாவை இயற்றியது ஒன்றிய பா.ஜ.க அரசு.

அதனை தி.மு.க. உள்ளிட்ட ஜனநாயகச் சக்திகள் கடுமையாக நாடாளுமன்றத்தில் எதிர்த்தன. ஆனால் பா.ஜ.க.வின் பாதம் தாங்கியான அ.தி.மு.க. ஆதரித்து வாக்களித்ததால்தான் அச்சட்டம் நிறைவேறியது. மக்கள் எதிர்ப்பு காரணமாக அந்தச் சட்டத்தை இதுநாள் வரையில் அமல்படுத்தாமல் வைத்திருந்தது பா.ஜ.க.

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கடந்த 2021ஆம் ஆண்டு செப்டம்பர் 8ஆம் நாள், இந்திய நாட்டின் ஒற்றுமையையும், மத நல்லிணக்கத்தையும் போற்றிப் பாதுகாக்கவும், அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதச்சார்பின்மைக் கோட்பாட்டினை நிலைநிறுத்தவும், இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019ஐ, இரத்து செய்திட ஒன்றிய அரசை வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றத்தில் அரசினர் தனித் தீர்மானத்தை நிறைவேற்றினோம்.

இப்போது, தேர்தலில் தனது அனைத்து அஸ்திரங்களும் எடுபடாமல் போன நிலையில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவதன் மூலமாகக் கரையேற முயற்சிக்கிறார் பிரதமர் மோடி. தேர்தல் நேரத்தில் மக்களின் உணர்ச்சிகளைச் சீண்டி அரசியல் ஆதாயம் அடையப் பார்க்கிறார் பிரதமர்.

அமைதிமிகு இந்தியாவில் பிளவுமிகு சட்டத்தைக் கொண்டு வந்த பா.ஜ.க.வையும், அந்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த அடிமை அ.தி.மு.க.வையும் மக்கள் மன்னிக்க மாட்டார்கள்! தக்க பாடம் புகட்டுவார்கள்!

இவ்வாறு சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள் ளார்.

---

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமை!

## மதுரவாயல் தெற்கில் 3,071 பேருக்கு நல உதவிகள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு - அமைச்சர்கள் எ.வ.வேலு - மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

சென்னை, மார்ச் 12-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 3071 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் கழக அரசின் நிதி நிலை விளக்க மாபெரும் பொதுக் கூட்டம் இன்று (12.03.2024) மாலை 5.00 மணியளவில் செட்டியார்அகரம் பிரதான சாலையில் பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறவுள்ளது.

வளசரவாக்கம் 11வது மண்டலக் குழுத் தலைவர், நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, இராமாபுரம் வ.செல்வகுமார், வீர.கனிமொழி ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழக நிர்வாகிகள் பி.எம். செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ்.பாரதி, கே.ராஜி, ஹேமலதா கணபதி, வட்டக் கழக செயலாளர்கள் எஸ்.ரமேஷ்ராஜ், த.ரமேஷ், அ.மோசஸ், எஸ்.அப்பன் (எ) சத்தியமூர்த்தி, தி.சார்லஸ், ஆ.செல்வம், மூன் லைட் டி.ரவி ஆகியோர் வரவேற்புரையாற்றுகிறார்கள்.

பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, கழக பொருளாளர், நாடாளுமன்ற தி.மு.க. குழு தலைவர் டி.ஆர்.பாலு, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் எஸ்.அரவிந்த் ரமேஷ், எம்.எல்.ஏ., ஏ.எம்.வி..பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ்குமார், க.தனசேகரன், காசிமுத்துமாணிக்கம், எஸ்.பத்மபிரியா, பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன், எம்.சி., எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், எம்.சி., மு.மனோகரன், பா.வாசுகி பாண்டியன், எஸ்.பாஸ்கரன், எம்.சி., வி.ராஜேஷ், அ.விஜயபாலா, கே.குமரேசன், எஸ்.பி.அருள்,

கே.கண்ணன், எம்.சி., மு.ராஜா, எம்.சி., எம்.கிருஷ்ணமூர்த்தி, எம்.சி., இரா.துரைராஜ், எம்.சி., எஸ்.வி.ரவிச்சந்திரன், எம்.சி., வி.இ.மதியழகன், எம்.சி., துரைகபிலன், அரிமா சு.சேகர், ஜி.வெங்கடேசன்

வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், எம்.சி., சைதை சம்பத், சைதை மா.அன்பரசன், எம்.கே.ஏழுமலை, ப.ரவி, உ.துரைராஜ், மின்னல் கந்தப்பன், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், எஸ்.டி.தங்கராஜன், ரா.பாலசுந்தரம், பி.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராஜ், தா.பஷீர், டி.ஜே.பாஸ்கர்,

வே.ஆனந்தன், ஏ.கே.ஆனந்த், எஸ்.தீபக், எம்.விநாயகமூர்த்தி, சைதை சாதிக், கழக த.ரமேஷ்,தரமணி ஜெகதீசன், பா.அருண்குமார், டி.கனிமொழி, சி.பரிமேலழகன், சி.ரமேஷ், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், ஜி.வரதன், மருத்துவர் இரா.மு.முபாரக், எம்.எஸ்.ஹரிபாபு, எம்.ஆர்.சசிக்குமார், எஸ்.முகேஷ், நிஷாசையத், எஸ்.பாலமுருகன், ச.சங்கர் கணேஷ், எம்.சி., மா.இ.அ.து.அ., செ.ரவி, மா.இ.அ.து.அ., செல்வி ரமேஷ், சாந்தி இராமலிங்கம், எம்.சி., ஆ.மாலினி, எம்.சி., எம்.இ.ஸ்டாலின், எம்.சி., ரமணி மாதவன் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

சி.சுந்தர், க.கைலாசம், இரா.ராஜேந்திரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

சைதை எஸ்.பஷீர் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி - வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் முன்னிலை

## சைதை 140 (அ) வட்டத்தில் 500 பேருக்கு நல உதவிகள் - பொதுக்கூட்டம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் - கோவி. செழியன் சிறப்புரை!

சென்னை, மார்ச் 12-

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்குப் பகுதி, 140 (அ) வட்டம் கலைஞர் தெரு சார்பில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் தெருமுனைப் பொதுக்கூட்டம் இன்று (12.3.2024) மாலை 6 மணிக்கு பழைய மாம்பலம் ரோடு - கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு சந்திப்பில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு பகுதி பிரதிநிதி சைதை எஸ்.பஷீர் தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர் 10-வது மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., சைதை சம்பத், ந.தமிழரசு, சைதை ஆர்.ரவி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வி.மனோகரன், சைதை ஆர்.ஜெகன்நாதன், தென்றல் தினேஷ், கே.கௌரி, எஸ்.சரவணன், பா.கமல் சங்கர், கே.துளசி, பிரஸ் விஜி, ம.சுகுமார், த.ஜெயராமன், எல்.வைரவமூர்த்தி ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

நல உதவிகளை மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன், அரசு கொறடா கோவி. செழியன் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் தமிழச்சி தங்க பாண்டியன், துணை மேயர் மு.மகேஷ்குமார், எஸ்.குணசேகரன், சைதை மா.அன்பரசன், சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், களக்காடி எல்லப்பன், சைதை ஆர்.ரமேஷ், கவிதா கவுதமன், வி.பி.ஜானகிராமன், சை.மு.சேகர், அட்கோ கமலநாதன், எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா,

சைதை சாதிக், அஞ்சல் ராமன், த.பாபு, நா.மணிகண்டன், ஆர்.கிருஷ்ணகுமார், பி.ஆர்.துரைராஜ், கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, கிண்டி ஆர்.எல்.செல்வம், சைதை ஜி.பாபு, பொன். ஜெய்சிங், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பாஸ்கர் ஏ.ரவி மற்றும் பலர் கலந்துகொள்கின்றனர்.

சி.வெங்கடேசன், ஜி.அறிவரசு, டி.ராஜேந்திரன், கே.நவீன், எம்.விக்னேஷ், கே.பூங்கொடி, எஸ்.வசந்தா ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.





திருவாலங்காடு கிழக்கு ஒன்றியம் சின்னம்மா பேட்டை ஊராட்சி பூமாலை நகரில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு வளர்ச்சி நிதியிலிருந்து ரூ 6.00 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டடம் அமைக்கப்பட்டு அதனை திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி வழங்கும் பணியை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ். மகாலிங்கம் , மாவட்ட துணை செயலாளர் சி. ஜெயபாரதி, ஒன்றிய குழு துணைத் தலைவர் சுஜாதா மகாலிங்கம், ஊராட்சி மன்ற தலைவர் சரண்யா நாகராஜன், கிளைக் கழக செயலாளர் சீனிவாசன், கே. மூர்த்தி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் களம்பாக்கம் எம். பன்னீர்செல்வம் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

---

இ.எஸ்.பெர்னார்ட் தலைமை! இ.கருணாநிதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

## பல்லாவரம் தெற்குப் பகுதியில் பொதுக்கூட்டம்!

### டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - தமிழன் பிரசன்னா - செங்கை சந்தானம் சிறப்புரை!

பல்லவபுரம், மார்ச் 12-

பல்லாவரம் தெற்குப் பகுதிக் கழகம் சார்பில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக் கூட்டம் இன்று (12.3.2024) மாலை 5 மணிக்கு, கீழ்க்கட்டளை பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு பகுதிச் செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட் தலைமை வகிக்கிறார்.

எம்.சங்கீத்குமார் என்கிற முருகையன் வரவேற்றுப் பேசுகிறார்.

வை.தா.ர.மூர்த்தி, வி.கர்ணல், இ.வெங்கடேசன், பி.மீனா, ஆர்.செந்தில்குமார், அ.சூசைராஜ், ஏ.ராமச்சந்திரராஜா, பி.இராமகிருஷ்ணன், எஸ்.சுரேஷ்குமார், டி.பார்த்திபன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் தமிழன் பிரசன்னா, செங்கை சந்தானம், மாவட்டத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. , மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் க.அன்புச்செல்வன், மேயர் க.வசந்தகுமார், துணை மேயர் கோ.காமராஜ், பகுதிச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை, ஏ.கே.கருணாகரன், அ.தமிழ்மாறன் மற்றும் பலர் கலந்துகொண்டு பேசுகின்றனர்.

சிலம்பரசன் நன்றி கூறுகிறார்.

---

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ்

## காசநோயாளிகளுக்கு தலா 500 கிராம் சத்துமாவு!

### மேயர் ஆர்.பிரியா வழங்கினார்!

சென்னை,மார்ச்.12-

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட காசநோயாளிகளின் ட்ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்திடும் வகையில், காசநோயாளிகளுக்கு தலா 500 கிராம் சத்துமாவு பாக்கெட்டுகளை மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று வழங்கினார்.

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட காசநோயாளிகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்திடும் வகையில், தன்னார்வலர்கள் பங்களிப்புடன் 383 காசநோயாளிகளுக்கு தலா 500 கிராம் சத்துமாவு பாக்கெட்டுகளை மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று (11.03.2024) தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் மூலம் 2025ஆம் ஆண்டிற்குள் காசநோயினை ஒழிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் செயல்பட்டு வரும் அனைத்து நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களில் தரமான காசநோய் கண்டறிதல் சேவை மற்றும் சிகிச்சை அளிக்கும் வசதிகள் உள்ளன. இத்திட்டம் குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் பணியாளர்கள் மற்றும் மக்களைத் தேடி மருத்துவம் தன்னார்வத் தொண்டர்கள் காசநோய் கண்டறியும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

2023ஆம் ஆண்டு 3,70,258 நபர்களுக்கு காசநோய் பரிசோதனை செய்யப்பட்டு, 11,273 காசநோயாளிகள் மாநகராட்சியின் மூலமாக கண்டறியப்பட்டனர். மேலும், 4,553 காசநோயாளிகள் தனியார் துறையிலும் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஊட்டச்சத்து குறைபாடு உடையவர்களை காசநோய் தொற்று எளிதில் தாக்கும். மேலும், காசநோய் தொற்று உடையவர்கள் பசியின்மை காரணமாக சரிவர உணவு உட்கொள்ள இயலாது. இதனால், அவர்களுக்கு ஊட்டச்சத்து குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. உட்கொள்ளும் மருந்துகளுடன் சத்தான உணவுப் பொருட்களை உட்கொள்ள வேண்டும். இல்லையெனில் காசநோயாளிகளின் இறப்பு விகிதம் அதிகரிக்கக்கூடும்.

ஆகையால் காசநோயாளிகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்திட "நிக்ஷய் போஷன் யோஜனா" எனும் திட்டத்தின் கீழ் அவர்களின் சிகிச்சை காலம் முழுவதும் மாதந்தோறும் ரூ.500 அவர்களது வங்கிக் கணக்கிற்கு செலுத்தப்பட்டு வருகிறது.

காசநோயாளிகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்திட Nikshay Mithra திட்டத்தின் மூலம் தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்களிலிருந்து நன்கொடை வரவேற்கப்படுகிறது. இது வரை 17 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் 160 தனிநபர்கள் மூலம் 850 காசநோயாளிகளுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, ஜி.ஆர்.டி. தங்க மாளிகை நிறுவனத்தின் சார்பில் தன்னார்வ பங்களிப்புடன் வழங்கிய ரூ.5 இலட்சம் நன்கொடையினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு காசநோயாளிகளின் ஊட்டச்சத்தினை மேம்படுத்திட இந்த மாதம் முதல் 383 காசநோயாளிகளுக்கு மாதந்தோறும் தலா 500 கிராம் சத்துமாவு பாக்கெட்டுகள் 6 மாதங்களுக்கு வழங்கப்படும்.

காசநோயாளிகள் மருந்து உட்கொள்ளும் ஆரம்ப காலத்தில் அவர்களால் திடப்பொருட்களை உட்கொள்ள இயலாது. திரவ உணவுப் பொருட்களான சத்துமாவு கஞ்சி பருக ஏதுவாக இருக்கும். இந்தச் சத்துமாவானது, முளை கட்டிய பயறு மற்றும் சிறு தானியங்களினால் தயாரிக்கப்பட்டது. இந்தக் கஞ்சியை தினமும் பருகுவதால், உடலுக்குத் தேவையான சக்தி கிடைப்பதோடு நோய் எதிர்ப்புத் தன்மையும், இரத்த அணுக்களும் அதிகரிக்கும். அவர்களின் உடல் எடையும் அதிகரிக்கும். இறப்பு விகிதமும் குறையும்.

இதுபோன்று, இன்னும் பல தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள், தனியார் நிறுவனங்கள் காசநோயாளிகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்திட தொடர்ந்து தங்களின் பங்களிப்பை அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அனைவரும் ஒன்றிணைந்து காசநோய் இல்லா சென்னை உருவாக்கப் பாடுபடுவோம்.

இந்நிகழ்ச்சியில், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு. கணேசன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி ரேணுகா, திருமதி விஜயலட்சுமி, மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக வழக்கறிஞர் அணி சார்பில் வார் ரூம் எனப்படும் கட்டளை மையம் திறப்பு விழா திருவள்ளூரில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் தலைமையில் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலையில் வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் பி.கே. நாகராஜ் ஏற்பாட்டில் சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்பி கலந்து கொண்டு வாரூம் எனப்படும் கட்டளை மையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் மாநில சட்டதுறை நிர்வாகிகள் சந்துரு குரு, ஜெ.பச்சையப்பன், நிர்வாகிகள் கே.திராவிடபக்தன், ஆர்டிஇ.ஆதிசேஷன், சி.சு. ரவிச்சந்திரன், கூளூர் ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், அரிகிருஷ்ணன், ஜோதிக்குமார், ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், பொன்.பாண்டியன், வழக்கறிஞர்கள் கு.லோகராஜ், எஸ்.கே.ஆதாம், கருணாகரன், பரிபூரணம், நித்தியஜோதி, வி.எஸ்.சதீஷ், ராயல்பாஸ்கரன், டேனியல் லூகா தமிழ்அரசன், அருணகிரி, ரமணன், சோமசுந்தரம், ஸ்ரீ.முருகன், வி.எஸ்.நேதாஜி, சரஸ்வதிசந்திரசேகர், காந்திமதி, கோவிந்தம்மாள், சி.சு.விஜயகுமார், தி.ஆ.கமலக்கண்ணன், கைலாசம், சித்திக் ஜி.எம். கிஷோர், ஜி.பாண்டியன், கு.பிரபாகரன், ஆ.பவளகன்னன், தங்கனூர் ஆனந்த், டி.ஆர்.தினகர், விக்னேஸ்வரி பாபு உள்பட பலர் உள்ளனர்.